1979 மார்ச் 21]

ஆயக்குடி அரசு மருத்துவமனை.

*வினா எண். 498—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பழனி வட்டம் ஆயக்குடி அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டு ஒன்று கட்டித்தரக் கோரி அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கேட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) இம்மருத்துவமனையில் தற்போது பிரசவ சிகிச்சை கோரி வருபவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிப்படுவதாலும் உள்நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கவில்லையாதலாலும் தற்போதுள்ள படுக்கை வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டத்திலுள்ள ஆயக்குடி மருத்துவ மனை 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கட்டப்பட்டது. இது ஒரு 20,000 மக்களைக் கொண்ட பெரிய பகுதியாகும். ஒவ்வொரு நாளும், 500, 600 வெளி நோயாளிகளும், 20, 25 உள் நோயாளிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள், அங்கே இருக்கக்கூடிய இந்த மருத்துவ மனையில் வேண்டிய வசதி இல்லை. அத்தோடு பிரசவத்திற்காக வரும் தாய்மார்களுக்கு தனியாக பிரசவ விடுதி ஒன்றும் கிடையாது. ஆகவே அதை கட்டித்தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கின்றனர். அதை நிறைவேற்றித் தர இனியாவது அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இந்த ஆயக்குடி மருத்துமனையில் 10 படுக்கைகள் இருக்கின்றன. இந்த 10 படுக்கைகளில் 5 படுக்கைகள் ஆண்களுக்கும் 5 படுக்கைகள் பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டு, அங்கே அனுமதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆயக்குடியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பழனியில் ஒரு பெரிய மருத்துவ மனை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் கடந்த ஆண்டுகளில் 1975, 1976, 1977-ம் ஆண்டுகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட வெளி நோயாளிகளின் மொத்த

எண்ணிக்கை 1,248, 1,541, 1,076 ஆகும் அதேபோல் கடந்த மூன்று ஆண்டுகளில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட உள் நோயாளிகள் 1975ல் 260, 1976-ல் 242, 1977-ல் 399. ஆகவே, தேவையான அளவுக்கு படுக்கை வசதிகளும். மருந்து வசதிகளும் அங்கே இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்படி இடம் இல்லாத காரணத்தால்தான் அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அபிவிருததி செய்தால் வசதியாக இருக்கும். அதை இப்பொழுது அனுமதிக்கவில்லை என்ற காரணத்தை காட்டி புறக்கணிக்கக்கூடாது. அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றித்தரவேண்டும் என்றும் அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பிரசவத்திற்காக வந்த பெண் நோயாளிகள் யாரும் அப்படி இடம் இல்லை என்று திருப்பி அனுப்பப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய எல்லா மருத்துவ வசதிகளும் அளிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே எந்தவிதமான புகாரும் மக்களிடத்திலிருந்தும் வரவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

* வினா எண். 499— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஒரு மாதத்துக்கு நோயாளிகளுக்கு மொத்தம் மருந்து செலவு எவ்வளவு ஏற்படுகிறது ?

(ஆ) முக்கியமான பல மருந்துகள் நோயாளிகளுக்கு கிடைப் பது இல்லை என்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்வி மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கும் வெளிநோயாளிகளுக்கும் சேர்த்து ஒரு மாதம் மட்டும் ரூ. 2,87,356 மதிப்புள்ள மருந்துகள் அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.